# தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம் 10

வாரம் 35

**அலகு : குகப்படலம்**

## இவ்வாரத்துள் பெற்றுக்கொள்ளக் கூடிய கற்றற்பேறுகள் :

- பாடல்களைச் சந்தி பிரித்து, கொண்டுகூட்டி வாசிப்பார்.
- பாடல்களின் பொருளைத் தமது சொந்த மொழி நடையில் எழுதுவார்.
- பாடல்களில் இடம்பெறும் அணிகள் பற்றி விளக்கி எழுதுவார்.
- அரும்பதங்களின் பொருளை அறிந்து கூறுவார்.
- பாடல்களில் நயந்தவற்றை எழுதுவார்.

## மாணவர் செய்ய வேண்டிய செயற்பாடுகள் :

I. தமிழ் இலக்கியத் தொகுப்புப் பாடநூலின் பக்கம் 42 இலுள்ள பாடல் 5 இனைச் சந்தி பிரித்து வாசிக்கவும்.

- அரும்பதங்கள்

  * நெறி – சத்திய வழி * திறம்பா – மாறுபடாத * மெய்மை – வாய்மை

  * இளந்தேவி – இளையப் பட்டத்து அரசி * பயந்த – பெற்றெடுத்த

II. தமிழ் இலக்கியத் தொகுப்புப் பாடநூலின் பக்கம் 42 இலுள்ள பாடல் 6 இனைச் சந்தி பிரித்து வாசிக்கவும்.

III. பின்வரும் அரும்பதங்களுக்கான பொருள்களை அறிந்து கொள்க.

* மயானம் – சுடுகாடு * துணை – கணவன் (தசரதன்) * தோன்றல் – மகன் (பரதன்)

* கானகம் – காடு * ஆர்கலி – கடல் * மாயன் – திருமால் * நெடுமை – நீண்ட

* குரிசில் – தலைவன் (பரதன்)

III. பாடப்புத்தகத்தைத் துணையாகக் கொண்டு பாடல் 5, 6 இன் பொருள்களை அறிந்து கொள்க.

IV. பாடல் 6 இல் பயன்படுத்தப்பட்டுள்ள அணிகளை இனங்கண்டு விளக்கமாக எழுதுவதற்கு முயல வேண்டும். (அதற்கு பின்வரும் விளக்கங்களை கவனிக்க.)

- **அணிகள்**
  - துயர்க்கடல் : உருவக அணி
  - துயராகிய கடல்
  - துயர் கடலாக உருவகிக்கப்பட்டுள்ளது.
- **விசேட விடயம் :**

  "சுற்றத்தார் தேவரொடும் தொழ நின்ற கோசலை" என கோசலையையும் "அறந்தானே என்கின்ற அயல் நின்றாள்" என சுமித்திரையையும் கூறிய கம்பர் இப்பாடல் முழுவதும் கைகேயியின் கொடுமை நிறைந்த மனத்தைக் கூறியுள்ளதுடன் இவர் யார்? என குகன், வெறுமனே கேட்பதன் மூலமும் கைகேயியை சாதாரணமானவளாக காட்டப்பட்டுள்ளாள்.

- **துணைக்கதை (மாவலி)** : முற்காலத்திலே திருமால் வாமனனாக வந்து மாவலியிடம் மூவடி மண் கேட்டுப் பின்னர் நெடிய திருவுரு எடுத்து ஈரடியால் எல்லா உலகத்தையும் பெற்றுக் கொண்டார்.
- திருமால் போல அவதாரம் எடுத்துச் சிரமப்படாது தனது மனதால் எண்ணிச் செய்கின்ற கொடுமையினால் எளிதாக அளவு செய்தவளாக கைகேயி காட்டப்பட்டுள்ளாள்.

X. மேலதிக விளக்கங்களுக்காக கீழே தரப்புட்டுள்ள இணையத்தள இணைப்புக்களைப் பயன்படுத்திக் கொள்க.

XI. இச்செயலட்டையின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள கணிப்பீட்டு வினாக்களுக்கு விடையளிக்க.

XII. அனைத்து வினாக்களுக்குமான விடைகளை உங்கள் பாட ஆசிரியரிடம் வழங்கி சரிபார்த்துக் கொள்க.

**மேற்படி செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய புத்தகங்கள், Website, LMS பாடம் கற்றல் உபகரணங்கள் :**

**Youtube : https://www.youtube.com/watch?v=0Srd6KaJHzE**

**கணிப்பீடு :**

1. **பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.**
   1. "சுடு மயானத்திடை தன் துணை ஏக" - இங்கு சுடுமயானம் என்பது,
      1. உவமைத்தொகை 2. பண்புத்தொகை 3. உம்மைத்தொகை
      4. வினைத்தொகை
   2. பயந்த பெரியாள், அளந்த உலகு என்ப
      1. பெயரெச்சம் 2. வினையெச்சம் 3. முற்று 4. பெயரெச்சத்தொடர்
   3. கரணை ஆர்கலி என்பதில் இடம்பெற்றுள்ள அணி
      1. உவமை 2. உருவகம் 3. தற்குறிப்பேற்றம் 4. தன்மை நவிற்சி

2. **பின்வரும் கட்டமைப்பு வினாவுக்கு விடையளிக்க.**
   1. பரதன் சுமித்திரையை குகனுக்கு அறிமுகம் செய்து வைக்கும் விதத்தை விளக்குக.